# தமிழீழ அரசியல்துறை
POLITICAL WING OF TAMILEELAM

https://thamileelaarasiyalthurai.info
tat.info.international@gmail.com
+(44) 0734 983 8393


TAT20260412-15T

நிர்வாகம்
தமிழீழ அரசியல் துறை
அனைத்து நாடுகள்
12-04-2026

# கணபதிப்பிள்ளை ஞானப்பூங்கோதை அவர்களுக்கு "நாட்டுப்பற்றாளர்" என மதிப்பளிப்பு!

தமிழீழ தேசத்தின் விடுதலையைத் தணியாத இலட்சியமாக வரித்து, அந்த இலட்சியத்திற்காக உறுதியோடு நீண்ட பல தசாப்தங்கள் உழைத்த உன்னதமான பெண் ஒருவரை, இன்று நாம் இழந்துவிட்டோம். ஈவிரக்கமற்ற இயற்கையின் பசிக்கு, மற்றுமொரு தமிழினப் பற்றாளர் இரையாகி விட்டார். அந்த அற்புதமான "இலட்சியப்பெண் கணபதிப்பிள்ளை ஞானப்பூங்கோதை" ( வண் அக்கா ) அவர்களை இழந்து, தமிழர் வாழும் தேசமெல்லாம், இன்று ஆறாத்துயரில் மூழ்கிக் கிடக்கின்றது.

தமிழர் தாயகத்தில் தமிழீழ விடுதலைக்கான போராட்டம் தீவிரம் அடைந்த காலத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழீழத் தேசியத் தலைவரின் கொள்கை மற்றும் உறுதியின்பால் ஈர்க்கப்பட்டு தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தேசப்பற்றும் மொழிப்பற்றும் நிறைந்த ஒரு தமிழீழ விடுதலைப்பற்றாளராக வாழ்ந்த "கணபதிப்பிள்ளை ஞானப்பூங்கோதை" அவர்கள் 11-04-2026 அன்று இயற்கை எய்தினார் என்னும் செய்தி அறிந்து தமிழீழ மக்களும் அவரை நேசித்த போராளிகளும் ஆறாத்துயர் அடைந்தோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டமும் எமது போராளிகளும் தலைமறைவாக வாழ்ந்த காலத்தில் குறிப்பாக வன்னிப் பெருநிலப்பரப்பில் செயற்பட்ட எமது போராளிகளுக்கு உணவளித்து, அடைக்கலம் கொடுத்து அவர்களைப் பாதுகாத்த ஓர் அற்புதமான தமிழ் இனப்பற்றாளராக விளங்கிய இவரை, அக்காவாக, அம்மாவாக நேசித்த போராளிகள் "வண் அக்கா" என்ற புனை பெயரிலேயே அழைத்தனர். இந்திய இராணுவம் தமிழீழத்தை ஆக்கிரமித்திருந்த காலத்தில் இவருடைய வீடு பல முறை இந்திய இராணுவத்தின் சுற்றி வளைப்பிற்கும், தேடுதல் வேட்டைக்கும் உள்ளாகி, வண் அக்காவிற்கும் அவரது குடும்பத்தினருக்கும் பல சொல்லொணா துயரங்களையும் உயிர் அச்சுறுத்தல் களையும் கொடுத்தது, சில சமயங்களில் வண் அக்காவும் அவரது குடும்பமும் போராளிகளின் பாதுகாப்பிலும் இருக்க வேண்டிய சூழ்நிலையை இந்திய ராணுவம் உருவாக்கி இருந்தது, அவருடைய பிள்ளைகள் மிகச் சிறுவர்களாக இருந்தபோதிலும் அவர் எதையும் பொருட்படுத்தாமல் அசைக்கமுடியாத உறுதியோடும், துணிவோடும், எமது விடுதலைப் போராட்டத்தையும் போராளிகளையும் தொடர்ந்தும் ஆதரித்துக் கொண்டே இருந்தார்.

வன்னிப் பகுதிகளில் செயற்பட்ட எமது போராளிகளின் ஒரு பாதுகாப்பான முகாமாகவே வண் அக்காவின் வீடு இருந்தது என்றால் அது மிகையாகாது, இவரது வீட்டை இந்திய இராணுவம் முற்றாக ஆக்கிரமித்து தங்களுடைய முகாமாகவே பாவித்தது. அதன் காரணத்தால் அந்த வீடும் பாரிய சேதமடைந்தது, வன்னி மண்ணில் மேஜர்.பசீலன், கரும்புலி லெப்ரினன்ட் கேணல் போர்க், சமர்க்கள நாயகன் பிரிகேடியர்.பால்ராஜ் மற்றும் பல போராளிகளின் நம்பிக்கை மிக்க ஆதரவாளராக விளங்கிய வண் அக்கா தனது பிள்ளைகளையும் போராட்டத்தில் இணைத்து, தான் நேசித்த மண்ணினதும், மக்களினதும் விடுதலைக்காக மகத்தான பங்காற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருடைய இழப்பு, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் தமிழீழ மக்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஓர் பேரிழப்பாகும். இவரது இழப்பால் தவிக்கும் குடும்பத்தினர், உறவினர்கள், மற்றும் நண்பர்களின் துயரத்தில் தமிழீழ அரசியல்துறையினராகிய நாமும் பங்கெடுத்துக் கொள்வதுடன் கணபதிப்பிள்ளை ஞானப்பூங்கோதை ( வண் அக்கா ) அவர்களின் இனப்பற்றிற்காகவும் இவர் ஆற்றிய தேசியப் பணிக்காகவும் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் வழி காட்டுதலைப் பின்பற்றி **"நாட்டுப்பற்றாளர்"** என மதிப்பளிப்பதில் தமிழீழ அரசியல்துறையினராகிய நாம் பெருமை அடைகின்றோம்.சத்திய இலட்சியத்திற்காக களமாடி தங்கள் இன்னுயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களை ஆதரித்து அடைக்கலம் தந்த இவர் போன்றவர்கள் எங்கும் எம்மை விட்டு சென்று விடவில்லை, இவர்கள் எங்கள் தேசத்தின் சுதந்திர மூச்சாக எங்கள் எல்லோருக்குள்ளும் வாழ்ந்து கொண்டே இருப்பார்கள்.

## "தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"

திரு. கி. நல்லையா
நிர்வாகப் பொறுப்பாளர்
தமிழீழ அரசியல்துறை
அனைத்து நாடுகள்.

திரு. இ. இளங்கீரன்
பொறுப்பாளர்
தமிழீழ அரசியல்துறை
அனைத்து நாடுகள்.




தமிழீழ அரசியல்துறை - அனைத்து நாடுகள்

தமிழீழ அரசியல்துறை - ஐக்கிய இராச்சியம்
தமிழீழ அரசியல்துறை - கனடா
தமிழீழ அரசியல்துறை - சுவிச்சர்லாந்து
தமிழீழ அரசியல்துறை - பிரான்சு
தமிழீழ அரசியல்துறை - அவுஸ்திரேலியா
தமிழீழ அரசியல்துறை - யேர்மனி
தமிழீழ அரசியல்துறை - நியூசிலாந்து
தமிழீழ அரசியல்துறை - அமெரிக்கா
தமிழீழ அரசியல்துறை - ஸ்கொட்லாந்து
தமிழீழ அரசியல்துறை - நோர்வே
தமிழீழ அரசியல்துறை - டென்மார்க்
தமிழீழ அரசியல்துறை - பின்லாந்து